**STC**.2685/2023 தேதி - 19.07.2025

மனுதாரர் ஆஜரில்லை. பிரிவு 256 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**DW**1, பால்சுசில், த/பெ.ஆரோக்கியசாமி

**DW**1.முதல் விசாரணை தொடர்ச்சி.

சுந்தர்ராஜூ என்பவர் எனக்கு அறிமுகமான நபர். மற்ற நபர்கள் எனக்கு அறிமுகமான நபர்கள் கிடையாது. என்னை சுந்தர்ராஜூ அழைத்து போய் மணி என்ற பாலதண்டாயுதபானி என்பவரிடம் அறிமுகப்படுத்தினார். அந்த மணி என்ற நபரிடம் எனக்கு ரூ.2 லட்சம் கடன் வேண்டும் என்று கேட்டு 2 காசோலைகளை நான் மணியிடம் கொடுத்தேன். அதோடு சேர்த்து புரோநோட்டும் கொடுத்தேன். மணி 2,3 நாட்களில் அக்கவுண்டில் பணத்தை போட்டுவிடுவதாக கூறி என்னிடம் காசோலையை பெற்றுக்கொண்டார். அதன்பின்னிட்டு நான் சுந்தர்ராஜூடம் நான் அறிமுகப்படுத்தியதை பற்றி கேட்கும்போது தான் அவர் வாட்ஸ்அப் எனக்கு அனுப்பி வைத்தார்.

2. அப்போது சுந்தரராஜ் எனக்கு அனுப்பிய மெசேஜ் என்ன என்றால் **Sir mani told get a money within week** என்று அனுப்பினார். அதன்பின்னிட்டு மணியும், சுந்தர்ராஜூம் போனை எடுக்கவில்லை. அதன்பின்னிட்டு, பாலுசாமி என்பவர் மூலமாக எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. அப்போது தான் எனக்கு தெரியவந்ததது. சுந்தர்ராஜ் நான் மணியிடம் கொடுத்த காசோலையை எனக்கு தெரியாமல் மணியிடம் இருந்து பெற்று அதை பாலுசாமியிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதன்பின்னிட்டு நான் சுந்தர்ராஜூக்கு வாட்ஸ்அப் மெசேஜ் அனுப்பினேன். **You are trying to black mail me with some ulterior motives**. **You are a**

**teacher working in a govt. School and it's illegal and crime and fraudulently misusing my name and getting my cheques from another person to whom I have given for availing loan. You are complicating more and more and you will be ashamed of your deeds and behaviour.** சுந்தர்ராஜும், பால்சுசிலும் சேர்ந்து வாட்ஸ்அப்பில் பகிர்ந்துகொண்ட குறுஞ்செய்தியை எனது மொபைலில் நான் ஸ்கிரீன் ஷாட் எடுத்து அதனை என்னுடைய லாப்டாப்பில் பதிவிறக்கம் செய்து **EPSON** பிரிண்டரில் எடுக்கப்பட்ட கலர் புகைப்படம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(**B**) சான்றிதழுடன் இணைத்து எ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்படுகிறது. (மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனைக்கான காரணம் குறுக்குவிசாரணையின்போது தெரிவிப்பதாக கூறியுள்ளார்). இந்த வழக்கு பொய் வழக்காகும்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது,

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,

நீதித்துறை நடுவர், எண்.2, கரூர்